அ.வ.எண்.23/18

பிடபிள்யு.1

கு.வி. தொடர்ச்சி (பாரதிதாசன்)

நான் கிரையம் பெற்ற பத்திரத்தையும், குமரேசன் கிரையம் பெற்ற பத்திரம் வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 ஐ தவிர வடக்கு பக்கத்தில் எனது சுவருக்கு அடுத்து வடக்கில் இடம் உள்ளது என காட்டுவதற்கு வேறு பத்திரம் எதுவும் இல்லை என்று சொன்னால் வெங்கட்ராமன் பெயரில் ஏற்பட்ட 1896 வருடத்திய பத்திரம் உள்ளது. வா.சா.ஆ.2 பத்திரத்தில் என்னுடைய மீத ஜாகாவிற்கு வடக்கு என்று தான் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பத்திரத்தில் வெங்கட்ராமன் செட்டியார் வகையறா வீட்டிற்கு வடக்கு என கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வெங்கட்ராமன் செட்டியாருக்கு உள்ள மொத்த சொத்தையும் தான் குமரேசனிடம் விற்றார். கலியன் செட்டியார் யாரிடமும் சொத்தை கிரையம் வாங்கவில்லை அது அவருடைய சொத்து தான். கலியன் செட்டியாருக்கு தென்வடலில் எவ்வளவு இடம் உள்ளது என்பதற்கு அவருடைய பத்திரத்தை வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. பட்டாவில் கண்ட அளவு தவறு என்று சொல்லி வட்டாட்சியரிடமோ, கோட்டாட்சியரிடமோ மனு கொடுத்தேனா என்றால் இது வரை கொடுக்கவில்லை. வா.சா.ஆ.7 ல் கண்ட இரண்டு இரசீதுகளில் மின் இணைப்பு எண்.149 என்பது கடைக்கு உரிய இரசீது ஆகும். மின் இணைப்பு எண்.1750 என்பது வீட்டிற்கானது ஆகும். எனது வீட்டிற்கு வடக்கில் உள்ள நில கதவில் வாசல் படி இல்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்ட போது நான் உடனிருந்தேன் மற்றும் எனது வழக்கறிஞரும் இருந்தார். மாடி பகுதியை பார்த்தார்கள். கிழக்கில் உள்ள வாசல் படியையும் பார்த்தார்கள். மேற்கில் உள்ள வாசல் படியையும் பார்த்தார்கள். மேற்கு பகுதி வாசல் படி வழியாக நீதிமன்ற ஆணையர் வீட்டிற்குள் வந்தார். நீதிமன்ற ஆணையருடன் நானும் வந்தேன். என்னிடம் காட்டப்படும் புகைபடத்தில் உள்ளது எனது வீடு தான். அதில் பிரதிவாதி வீடும் உள்ளது. அந்த புகைபடம் பி.வா.சா.ஆ.3

ஆகும். அந்த புகைபடத்தில் இடது புறத்தில் உள்ளது எனது வீடாகும். பிரதிவாதி வீட்டின் கதவில் எண் போடப்பட்டுள்ளது என்றால் புகைபடத்தில் அப்படி தான் தெரிகிறது ஆனால் அது வீட்டின் வாசல் படி அல்ல சந்தின் கதவு ஆகும். என்னிடம் காட்டப்படும் புகைபடத்தில் உள்ளது எனது வீட்டின் மாடியில் உள்ள அறை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அந்த புகைபடத்தில் ஜன்னலுக்கு மேலே சன் சேடு இல்லை என்றால் சரிதான். வெளிபுறமாக திறப்பது போல் கதவுகளும் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு தான் எனது சுவற்றில் வடபுறத்தில் பிவிசி பைப் போட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த புகைபடத்தில் மேலிருந்து வரும் பிவிசி பைப்புடன் கீலே உள்ள பிவிசி பைப்பில் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த புகைபடம் பி.வா.சா.ஆ.4 மற்றும் பி.வா.சா.ஆ.5 ஆகும். என்னிடம் காட்டப்படும் புகைபடத்தில் உள்ள கட்டை சுவரிலிருந்து தான் மின் இணைப்பு கம்பம் பொருத்தப்பட்டுள்ளது என்றால் என்னுடைய சுவற்றிற்கு முன்னால் அந்த சுவர் வைக்கப்பட்டுள்ளது. அந்த புகைபடம் பி.வா.சா.ஆ.6 ஆகும். நீதிமன்ற ஆணையர் சொத்தை பார்வையிட்டு முடிக்கும் வரை இருந்தேன். பிரதிவாதி வீடானது கிழக்கு புறத்தில் வெள்ளாளர் தெருவை ஒட்டி மேற் கூரைவோடானது இறங்கி அமைந்துள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி வீடடின் திண்ணைக்கு மேற்கு புறத்தில் பிரதிவாதியின் வடபுற சுவற்றிலிருந்து எனது தென்புறச் சுவற்று வரை ஆஸ்பெட்டாஸ் சீட் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி வீட்டின் மழை நீரானது தென்புறத்தில் விழுகிறது என்றால் சரிதான். ஆஸ்பெட்டாஸ் கூரையை தாங்கி நிற்கும் விட்டமானது கருங்கல் தூணால் நிற்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். விட்டத்திற்கும் எனது சுவற்றிற்கும் இடையே 5 அடி இடைவெளி உள்ளது. நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு நான் ஆட்சேபனை தாக்கல் செய்யவில்லை. அதுபோல் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை தாக்கல் செய்தார்களா என்று எனக்கு தெரியாது. ஆணையர் அறிக்கையில் எனது சுவற்றிற்கும் அந்த கல் தூணிற்கும் இடையே இடைவெளி இருப்பதாக சொல்லவில்லை. விட்டத்தின் தென்புற விளிம்பிற்கும் எனது வடபுற சுவற்றிற்கும் இடையே 1

அடி இருக்கும் என்றால் சரியல்ல. 5 அடி இருக்கும். வா.சா.ஆ.1 மற்றும் 2ல் வடபுற சுவர் முழுவதும் எனக்கு பாத்தியப்பட்டது என கண்டுள்ளது என்றால் சரிதான். வடபுற சுவற்றிற்கு வடக்கில் எனக்கு இடம் இல்லை என்பதால் தான் வடபுற சுவர் முழுவதும் என்ற வாசகம் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் பிரதிவாதியின் இடம், என் இடம், கலியன் செட்டியார் இடத்தை அளந்தாரா என்றால் என் இடத்தையும், பிரதிவாதி இடத்தையும் மட்டும் அளந்தார். என் இடத்தையும், பிரதிவாதி இடத்தையும் அளந்ததற்கு தென்வடல் அளவு அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அளந்த போது கிராம நிர்வாக அலுவலர் வரவில்லை. பிரதிவாதி இடத்தையும், என் இடத்தையும் நான் அடையாளம் காட்டினேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகைபடத்தில் உள்ளது வலது புறத்தில் உள்ளது என்னுடைய குடிநீர் இணைப்பாகும். இடது புறத்தில் உள்ளது சந்திரசேகர் என்பவரின் குடிநீர் இணைப்பு ஆகும். அந்த புகைபடம் பி.வா.சா.ஆ.7 ஆகும். என்னிடம் காட்டப்படும் புகைபடத்தில் உள்ளது பிரதிவாதி வீட்டின் மேல்புற கதவு ஆகும் அதில் உள்ள எண்.2/51 என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த புகைபடம் பி.வா.சா.ஆ.8 ஆகும். என்னுடைய குடிநீர் இணைப்பானது எனது சொத்திற்குள் தான் அமைந்துள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் 4 அடி மனு சொத்தின் மேற்கு பகுதியின் நுழைவு பகுதியில் அமைந்துள்ளது என கண்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். கொசலையானது ஆரம்பத்திலிருந்து கடைசி வரை உள்ளது. பிவா.சா.ஆ.6 ல் மழை நீரானது கிழக்கு புறம் விழுவது போல் துவாரம் உள்ளது என்றால் சரிதான். வடக்கு புறத்திலும் 10 துவாரம் உள்ளது. நீதிமன்ற ஆணையர்அறிக்கையில் அந்த துவாரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 2-1/2 கொசலை என்பது நீதிமன்ற ஆணையர் மிகைப்படுத்தி எழுதியுள்ளார் என்றும் 1-1/2 அடி தான் கொசலை இருக்கும் என்றால் சரியல்ல. கொசலையிலிருந்து விழும் நீரானது சாக்கடையில் விழுமாறு சாக்கடை கட்டப்பட்டுள்ளது என்று எனது தூண்டுதலின் பேரில் நீதிமன்ற ஆணையர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. மனு சொத்தின் கிழக்கு பகுதியில்

உள்ள கதவின் எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புல எண்.201/4ல் எனக்கு உரிமை உள்ளது. புல எண்.201/4ல் எனக்கு சொந்தமான சொத்து உள்ளது. கலியன் செட்டியார் ஆவணத்தில் புல எண்.201/4 என கண்டுள்ளதா என்றால் இல்லை. என் வீட்டிற்கு வடக்கே 5,6 வீடு தள்ளி சிறுமருதூர் ரோட்டையும் வெள்ளாளர் தெருவையும் இணைக்கும் சாலை உள்ளது. எனது வீட்டிற்கும் வடபறச்சுவற்றிற்கும் வடபுறத்தில் உள்ள இடத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது வடபுற சுவற்றுடன் எனது எல்லை முடிந்துவிட்டது என்றும் எனவே வடபுறத்தில் உள்ள சாக்கடையில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வடபுற சாக்கடை எனக்கு சொந்தமானது என்றால் அந்த சாக்கடையிலேயே மழை நீரை விட முடியும் என்றும் தனியாக குழாய் போடவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. தாவா பி அட்டவணை சொத்தில் எனக்கு எந்த பாத்தியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பி அட்டவணை சொத்தில் எனக்கு பாத்தியம் இல்லை என்பதால் அதை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. பி அட்டவணை சொத்து எனக்கு சொந்தமில்லை என்பதால் வருவாய் ஆவணங்களில் திருத்த பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. எனது பிராதில் முன்னுக்கு பின் முரணான விஷயங்களை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வசதி உரிமை என்பது அடுத்தவர் சொத்தை தான் சொல்ல இயலும் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி வீட்டு மின் இணைப்பு எனது வீட்டின் சுவறறில் அமைந்துள்ளது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பொது சந்தில் கிழக்கு பக்கமும், மேற்கு பக்கமும் கதவு உள்ளது என்றும் அது பிரதிவாதிகளின் சந்து என்று சொன்னால் சரியல்ல. ஏ அட்டவணை சொத்தின் ஒரு பகுதி பி அட்டவணை சொத்து என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. ஏ அட்டவணை சொத்தில் சொல்லப்பட்டுள்ள தென்வடல் 12 அடி என குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. உண்மைக்கு மாறான தவறான சங்கதிகளை சொல்லி அடுத்தவர் சொத்தை அபகரிக்க இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் எனது வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல..